கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கம்பைநல்லூர் பேரூர்,
தருமபுரி மேற்கு மாவட்டம்.



ஜெயங்கொண்டம் மேற்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கோபிச்செட்டிப்பாளையம் மத்திய ஒன்றியம்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



கொடைக்கானல் மத்திய ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கோபாலசமுத்திரம் பேரூர் கழகம்.
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



தொரப்பாடி பகுதி,
வேலூர் மாவட்டம்.



திருவல்லிபுத்தூரில் நாம் தமிழர் கட்சி மாநில வழக்கறிஞர் இணைச்செயலாளர் பிரபாகர மூர்த்தி உட்பட 20க்கும் மேற்பட்டோர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் முன்னிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகரச் செயலாளர் ஐயாவு பாண்டியன் தலைமையில் தி.மு.க.வில் இணைந்துக் கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.எம்.கென்னடி மகன் க.ராகுல் – ஆர்.ரதி என்ற சுபிக்ஷா வின் திருமணத்தை சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை ஏற்று நடத்தி வைத்தார். இதில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் யோக.கிருஸ்ணகுமார், மணமக்கள் குடும்பத்தினர் உள்ளனர்.



மதுரை மாநகராட்சி மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி சோலை அழகுபுரம் மற்றும் பழங்காநத்தம் பகுதி 81, 74 மற்றும் 71 வது வார்டுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் புதிதாக தார்ச்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகள் அமைப்பதற்கான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாநகராட்சி தலைமை பொறியாளர் பாபு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், பகுதி செயலாளர்கள் காவேரி, அன்பழகன், சுதன், மதி வெங்கடேஷ், தவமணி, பொதுக்குழு உறுப்பினர் முருகானந்தம், மாமன்ற உறுப்பினர் லட்சிகா ஸ்ரீ, கழக நிர்வாகிகள் அன்புமதி, அம்சத் ராணி, முகமது ரபீக் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், பொதுமக்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி,மு,க, 43வது வார்டு முன்னாள் வட்ட செயலாளர் பாலா (எ) பாலசுப்ரமணியன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். துணை செயலாளர் ஜெ.முவேந்திரன், பகுதி செயலாளர்கள் மா.முகேஷ் ஷர்மா, சரவணன் அம்பலம் ஏற்பாடு மாவட்டப் பிரதிநிதி அருண் பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர் .



திண்டுக்கல் மாநகர கழக 3ம் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் திண்டுக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மூன்றாம் பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார் தலைமை வகித்தார். மாநகரச் செயலாளர் ராஜப்பா, திண்டுக்கல் தொகுதி பொறுப்பாளர் செல்வகுமார், மேயர் இளமதி ஆகியோர் சிறப்புரையாற்றினர், மாவட்ட கழக துணைச் செயலாளர் பிலால் உசேன், 1 ம் பகுதி செயலாளர் சந்தோஷ், மாநகர கழக நிர்வாகிகள் அழகர்சாமி, சரவணன், 3 ம் பகுதி வார்டு செயலாளர்கள் கேகேஆர் வெங்கடேஷ், ஷேக்பரீத், தர்மராஜ், ஜான்கென்னடி, சங்கர், சுப்புராஜ், விஜயகுமார், முகமதுரபீக், மாமன்ற உறுப்பினர் ஆரோக்யசெல்வி, சார்பு அணி நிர்வாகிகள் டீத்தூள்கண்ணன், உஷாதேவி, சண்முகம், கண்ணன், சிவமணி, ஆறுமுகம், வாக்குசாவடி முகவர்கள், கமிட்டி உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,சந்திரகிரி கிராமத்தில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணியர் நிழற்குடை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், உட்பட கழக நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.